# மக்களோடு மக்களாக கலந்து புதிய மேயர் பிரச்சினைகளை தீர்க்க முன் வர வேண்டும்



கோலாலம்பூர், ஆக. 20-
கோலாலம்பூரின் புதிய மேயர் மைமுனா ஷரில் கோலாலம்பூர் வட்டார மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளில் அவர்களோடு ஒன்றிணைந்து அதை நேரில் கண்டறிய வேண்டும் என ஒரு குடியிருப்போர் சங்கமும் 2 மக்கள் இயக்கங்களும் கேட்டுக் கொண்டன.

மக்களோடு மக்களாக கலந்து மக்கள் அவர்களின் பிரச்சினைகளை மேயர் நேரடியாக அறிய வேண்டும். இதன் மூலமே அந்த பிரச்சினைகளுக்கு சரியான தீர்வு காண முடியும் என கோலாலம்பூரை காப்பாற்றுவோம் என்ற இயக்கத்தின் தலைவர் எம்.அலி கூறினார்.

அரசியல், வர்த்தகம் மற்றும் நிறுவன நிலையில் மட்டும் மேயரின் தொடர்பு இருக்கக்கூடாது. சாதாரண மக்களுடன் அவர் கலந்து பழக வேண்டும் என்றார் அவர். அவர் மீது நாங்கள் நிறைய எதிர்பார்ப்பை வைத்திருக்கிறோம் என்றார் அவர்.

தாமான் பி.ரம்லி குயிருப்போர் சங்கத் தலைவர் கே.கே. தை கூறுகையில் மைமுனாவை மேயராக்கியிருக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கையை தாம் பாராட்டுவதாக அவர் சொன்னார்.

மக்களையும் உள்ளடக்கி எல்லாப் பிரச்சினைகளையும் நான் கவனிப்பேன் என்று அவர் கூறியிருக்கிறார். பெரும்பாலும் கடந்த காலங்களில் மேயராக இருந்தவர்களின் மூலம் கூட்டரசுப் பிரதேச மக்கள் பெரிய அளவில் பயனடைய வில்லை. எனவே அதை இவர் மாற்றி அமைக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

கடந்த கால மேயர்களின் சேவைகளில் பெரிய அளவில் திருப்தி இல்லை என்று அவர் கூறினார்.

பெரும்பாலும் மக்கள் அமைப்புகளோடு அவர்கள் தொடர்பு கொண்டதில்லை. அவர்களின் பிரச்சினையை அறிந்ததும் இல்லை என்று அவர் கூறினார்.

தங்கள் வட்டாரத்தில் நிலவுகின்ற 48 மாடி அடுக்குமாடி விவகாரமே இன்னும் இழுபறியாக இருக்கிறது. இதையெல்லாம் புதிய மேயர் தீர்க்க வேண்டும் என்றார் அவர்.

மற்றொரு குடியிருப்போர் நடவடிக்கை சங்கத் தலைவரான டான் பூன் சார்ன், கூறுகையில் வரும் 2040 ஆம் ஆண்டு வரைக்குமான கோலாலம்பூர் பெருந்திட்டத்தை கண்காணிக்க மாநகர மன்றம் ஒரு குழுவை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். புதிய மேயர் இதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.